(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலையில் அமைந்துள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு சொந்தமான தேர் பழுது அடைந்துள்ளதை சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) விராலிமலை திருக்கோவிலுக்குச் சொந்தமான தேரினைத் திருப்பணி செய்வதற்கு செயல் திட்டம் அரசிடம் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட ஒரு திட்டம் நீண்ட நெடுங்காலமாக 1985ஆம் ஆண்டிலிருந்து அறநிலையத் துறை ஆணையரின் கோப்பிலே இருக்கிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், விராலிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோவிலுக்குச் சொந்தமான தேரினைப் பழுதுபார்க்க திருப்பணிக் குழு அமைக்கப்பட்டு ரூ. 1,50,000-க்கு நிர்வாக அனுமதி 1987 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் தொகுதியிலுள்ள விராலிமலையில் அமைந்துள்ள சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் அந்த வட்டாரத்திலுள்ள மக்களால் வழிபடும் ஆலயங்களில் ஒன்றாக இருக்கின்ற காரணத்தால் அந்தத் தேரினை வருகின்ற திருவிழாக் காலங்களிலே சீர் செய்து ஓட்டுவதற்கு விரைவில் திட்டத்தை அமல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

(பதில் இல்லை).

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி.

***2557. திரு. பெ. சு. திருவேங்கடம்**: மாண்புமிகு வேளாண்மைத்-துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு அமெரிக்க வேளாண்மைத்துறை நிதி அளித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பயிர்களை அதிக அளவில் சேதப்படுத்தும் காய்ப் புழு, புகையிலைப்புழு போன்றவற்றைக் கட்டுப்படுத்த நுண்வுயிர்க் கிருமிகளை உபயோகிக்கும் திட்டம் ஒன்றினை 24-2-1989 முதல் அமெரிக்க நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதன் கீழ் செயல்படும் பயிர் பாதுகாப்பு ஆய்வு மையத்தில் செயல்படுத்தி வரு கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்கா உதவி செய்கிறது என்று சொல்லுகிறார்கள். அது பல்கலைக் கழகத்தில ஆய்வு மட்டத்தில் உள்ளதா? அல்லது அது விவசாயிகளுக்கு உணர்த்துகின்ற வகையில் அது செயல்படுகிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அது வேளாண்மைப் பல் கலைக் கழகத்தின் மூலம்தான் பயன்படுத்தப்பட்டு வரு கிறது. ஆனால் அங்கே இருக்கின்ற பண்ணைகளிலும் வயல்வெளிகளிலும் பரிட்சார்த்தமாக அது செய்யப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு உதவி நம்முடைய அரசு கேட்டது? அல்லது அமெரிக்கா அரசு ஏதாவது உதவி செய்துள்ளதா? அல்லது கடனாக வழங் கப்பட உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்கா நிதி உதவிதான் செய்து இருக்கிறது. சென்ற ஆண்டு 24-2-1989 முதல் செயல் படுத்தப்பட்டு வருகிறது. முதல் 5 ஆண்டுகளுக்கு ரூ. 34.97 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்திலே பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு அரசு எந்தவகையில் மானியமாக ஒதுக்கு கின்றது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வி யோடு தொடர்பு இல்லாதது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் விருத்தாச்சலத்தில் உள்ள முந்திரி ஆராய்ச்சிப் பண்ணைக்கு இந்த அமெரிக்க நிறுவனம் ஏதாவது உதவி அளித்து இருக்கிறதா ? அரசிடம் அதை மேலும் விரிவுபடுத்துவதற்கு திட்டம் ஏதாவது உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தொடர்புடைய கேள்வி அல்ல.

பருவ நிலையை முன்கூட்டி அறிய புதிய சாதனம்.

*3464. **திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பருவ நிலையை முன்கூட்டி அறிய உதவும் வகையில் கோவை விவசாயப் பல்கலைக் கழகம் கண்டுபிடித்துள்ள புதிய சாதனத்தை அரசு எந்தெந்த இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்க உத்தேசித்துள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பருவ நிலையை முன்கூட்டி அறிய முடியாத காரணங்களினால் அதிகமான பணத்தைக் கொடுத்து வீரிய வித்துக்களை வாங்கி விவசாயிகள் மானாவாரி பகுதிகளிலே போடுகிறார்கள். குறிப்பிட்ட நேரத்திலே ஒரு வார காலத்திற்குள் மழை பெய்யும் என்று சொன்னால், அந்த விதை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, கோவில் பட்டி, சங்கரன்கோயில் போன்ற மானாவாரி பகுதிகளில் பருவ நிலையை முன்கூட்டியே தெரிவிக்கக்கூடிய கருவியைப் பொருத்தி, விவசாயிகளுக்கு அவ்வப்போது பருவ நிலைகளைச் சொல்வதற்கான ஏற்பாட்டை செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் மேலும் 5 மையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இவை தமிழகத்தில் 7 வேளாண்மை கால நிலைப் பகுதிகளில் அமையவுள்ளன. இந்தத் திட்டத்திற்கான நிலைகள் விரைவில் அறிவிக்கப்படும்.